## பகுதி 1

# பொருளாதாரச் செயலாற்றமும், சிக்கல்களும் கொள்கைகளும் - 1978

## முன்னுரை

1978இல் இலங்கையின் பொருளாதாரம் 8.2 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்களவு வளர்ச்சி வீதத்தைப் பதிவு செய்தது. இது, சென்ற ஆண்டு பெறப்பட்ட 4.4 சதவீத வளர்ச்சி வீதத்திலும் பார்க்க ஏறக்குறைய இரட்டிப்பாக விளங்கியது. அத்துடன் அண்மைக் காலங்களில் பதியப்பட்ட இவ் வளர்ச்சி வீதம் 1968இல் பதியப்பட்ட 8.4 சதவீதத்திற்கு ஏறக்குறைய சமமான அளவில் விளங்கியதுடன், சென்ற பத்து ஆண்டுகளின் சராசரி வளர்ச்சியைவிட இரு மடங்கு மேலாக அமைந்தது. மேலும் சென்ற ஆண்டுகளில் இவ்வளர்ச்சி சில துறைகளிலேயே ஏற்பட்டு, மற்றவை வீழ்ச்சியுற்று அல்லது தேக்க நிலையிலிருந்தபோது, 1978இல் வளர்ச்சி உந்துகள் விரிவான துறைகளில் காணப்பட்டன,

தொடர்ந்து இரு ஆண்டுகளில் திருத்தமுற்று விளங்கிய இலங்கையின் வர்த்தக மாற்று விகிதம் 1978-இல் எல்லையளவால் வீழ்ச்சியுற்றது. இதற்கு தேயிலை விலைகளின் வீழ்ச்சியும் இறக்குமதி விலைகளின் அதிகரிப்புமே முதன்மைக் காரணமாகும். ஏற்றுமதிகள் மிதமாக உயர்வுற்றிருக்கையில் இறக்குமதிகள் 1977இலும் பார்க்க கணிசமானளவு உயர்வுற்றிருந்தன. ஆகவே 1977இன் மிதமானவர்த்தகமிகை எதிர்பார்த்தவாறு 1978இல் கணிசமானளவு பணக் குறையாக மாறியது. இதன் விளைவாக சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கு மிகையிலிருந்து குறையாக மாறியது. ஆயினும், கணிசமானளவு மூலதன உள்ளோட்டமும் பன்னாட்டு நாணய நிதியத்திலிருந்து பெற்ற பொருள் வளங்களும் சேர்ந்து இலங்கைக் கொடுப்பனவுகளின் மொத்த நிலுவையில் சார்பான நிலையைஉருவாக்கிக்கொண்டிருப்பதும்தொடர்ந்துமூன்றுவது ஆண்டில் வெளிநாட்டுச் சொத்துக்களை அதிகரிக்கச் செய்து 1979ஆம் ஆண்டிற்கு எடுத்துக் காட்டப்பட்ட நான்குமாத இறக்குமதிகளுக்கு சாதாரணமாகப் போதியளவு ஈடுகொடுக்கும் நிலையில் இருந்தன.

ஆயினும் வெளிநாட்டு சொத்துக்களின் வளர்ச்சியின் விரிவுத் தாக்கம் இவ்வாண்டில் அரசத்துறையினால் ஏற்படுத்தப்பட்ட சுருக்கத்தினால் பெருமளவிற்கு மிதமாக்கப்பட்டது. இப்போக்கு 1978இல் தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்பட்ட நாணயக் கொள்கைகளுடன் இணைந்து சென்ற இருஆண்டுகளில் பண நிரம்பலில் முறையே ஏற்பட்ட 29,35 சதவீத அதிகரிப்புக்களுக்கு மாறாக 11 சதவீதத்திற்கு கட்டுப்படுத்த உதவியது. இக்காரணிகள், உற்பத்தியில் ஏற்பட்ட கணிசமானளவு வளர்ச்சியுடன் இணைந்து பொருளாதாரத்தில் பண வீக்க அமுக்கங்களை கட்டுப்படுத்துவதற்கு சென்ற ஆண்டிலும் குறைவான நிலையில் உதவிபுரிந்தன. அத்துடன் பொருளாதாரத் தொழிற்பாட்டின் புத்தாக்கம் வளர்ந்து செல்லும் வேலையில்லாச் சிக்கலை ஓரளவுக்குக் குறைப்பதற்கு உதவியாகவிருந்தது.

1977இல் உருவாக்கப்பட்ட பொருளாதார சீர்திருத்தங்களே பொருளாதாரத்தின் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்திற்கும், 1978இல் தொடர்ந்து

ஏற்பட்ட அபிவிருத்திகளுக்கும் காரணமாகவிருந்தன. கடுமையான வர்த்தக நடவடிக்கைகளாலும் கொடுப்பனவுக் கட்டுப்பாடுகளாலும், பெறுமதிக்கு மேலாக மதிப்பிடப்பட்ட நாணயத்தை பேணிய முன்னைய நிகழ்ச்சிகளால் ஏற்பட்ட விலைக் குழப்பங்களைக் குறைக்கும் நோக்குடன் இலங்கை ரூபாவுக்கு ஏற்ப உண்மையான செலாவணி வீதத்தை கொண்டு வருவதே புதிய பொருளாதாரக் கொள்கையின் அடிப்படைப் பண்பாக விளங்கியது. அன்று நிலவிய பன்முக செலாவணி வீத அமைப்பு ஒருங்கிணைக்கப்பட்டு ரூபாவும் மிதக்க விடப்பட்டது. இது பல வர்த்தக கொடுப்பனவுக் கட்டுப்பாடுகளைத் தளர்த்த உதவியதுடன், உள்நாட்டு முயற்சிகளைப் பாதுகாக்கவும் அளவுக் கட்டுப்பாடுகளிலிருந்து தீர்வை முறைக்கு மாற்றவும் வழிவகுத்தது.

நியாயமான பாதுகாப்புத் தீர்வைகளுக்கு உட்பட்ட நிலையில் மூலப் பொருட்கள், உதிரிப்பாகங்கள் ஆகியவற்றின் எளிதான உள்வரவினாலும், கூடியளவு இயலளவுப் பயன்பாட்டினாலும் உள்நாட்டு தொழில் முயற்சிகளுக்கிடையில் அல்லது இறக்குமதிகளுக்கிடையில் ஏற்படும் அதிகரித்த போட்டியின் காரணமாக உள்நாட்டுக் கைத்தொழில் புத்தாக்கம் பெற வர்த்தகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள தாராளத் தன்மை துணை நிற்கும் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது. ஏற்றுமதித்துறையைப் பொறுத்தவரையில் ஏற்றுமதிச் சந்தைகளை அடைதற்கேற்ற வகையில் முதன்மை இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழில்களை தூண்டும் அதே வேளையில், புதிய செலாவணி வீதத்தினூடாக திருந்திய ஏற்றுமதித் தூண்டுதல்களை ஏற்படுத்தலாமென எதிர்பார்க்கப்படுகின்றது. உள்நாட்டு வேளாண்மையைப் பொறுத்தவரையில் விலைக் குழப்பங்களை நீக்கவும், அதிகரித்த உற்பத்தியைத் தூண்டவும் இப் புதிய செலாவணி வீதம் துணை நிற்குமென எதிர்பார்க்கப்பட்டது. பொதுவாக தனியார்துறையை ஊக்குவித்து அரசதுறைக்கு வழங்கப்பட்ட முதன்மைச் சலுகையை நீக்குவதெனவும் முடிவு செய்யப்பட்டது. அத்துடன் அரசதுறையில் அல்லது தனியார் துறையில் நிலவிய தனியுரிமைகளைக் கட்டுப்படுத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டது. அதிகரித்த போட்டியை உருவாக்கி விலை அதிகரிப்பையும் ஏனைய உள்நாட்டுக்கட்டுப்பாடுகளையும் நீக்குவதென முடிவு செய்யப்பட்டது.

சிறப்பாக உயர்ந்த தொழில் நுட்ப அறிவைப் பெறவும், புதிய ஏற்றுமதிச் சந்தைகளை அபிவிருத்தி செய்யவும், வெளிநாட்டு முதலீடுகள் ஊக்குவிக்கப்பட்டன. கொழும்புப் பெரும்பாக பொருளாதார ஆணைக் குழுவிற்கு உட்பட்ட, குறிப்பிட்ட எல்லைப்பரப்பில் நிறுவப்பட்ட ஏற்றுமதிச் செய்முறை வலயங்களில் ஏற்றுமதி அடிப்படைக் கைத்தொழில்களில் முதலீடு செய்ய முன்வரும் வெளிநாட்டு முயற்சியாளர்களுக்கு கவர்ச்சிகரமான தூண்டுதல்கள் வழங்கப்பட்டன. விலை உயர்விலும் ஏனைய கட்டுப்பாடுகளிலும் பார்க்க சிக்கனமான நாணய இறை முகாமையிலிருந்தும் போட்டிகளை உருவாக்குவதிலுமிருந்துமே பணவீக்க அமுக்கம் கட்டுப்படுத்தப்படுகின்றது. சேமிப்பாளருக்குச் சார்பான வட்டி வீதங்களை வழங்குவதன் மூலம் அபிவிருத்திக்குத் தேவையான பெரும் தொகையான மூலவளங்கள் திரட்டப்பட்டன. குறுங்கால வட்டிவீதங்கள் மிகப் பெருமளவால் அதிகரிக்கப்பட்டதால் குறுங்கால அடிப்படையில் பணவீக்க அமுக்கங்களை கட்டுப்படுத்தமுடிந்தது. அதே வேளையில் நீண்டகால வீதங்கள் பொதுவாக மாற்றமற்ற நிலையில் விடப்பட்டன. அபிவிருத்திக்காக அதிகளவு மூலவளங்களைத் திரட்டுவதற்கு முதலில் இத்துறையில் வெளிநாட்டு வங்கிகள் ஊக்குவிக்கப்படல் வேண்டும்.


இறைத்துறையில் போதிய மிகை வரவுசெலவுத் திட்டம் உருவாக்க வேண்டுமென்றும்விரிவான நிதியிடலை நாடி நிற்றலைத் தவிர்த்தல் வேண்டுமென்றும்முடிவெடுக்கப்பட்டது. அடிப்படைதேவையானபகுதியினர்க்கு மட்டும் நுகர்வோர் உதவு தொகைகளை வழங்குவதைக் கட்டுப்படுத்துவதற்கு நுகர்விலிருந்து முதலீட்டுக்கு மூலவளங்களை மாற்றுவது எதிர்பார்க்கப்பட்டது. சேமிப்புக்கும், முதலீட்டுக்குமான தூண்டுதல்களை மீளளிக்கும் வகையில் வரியமைப்பு திருத்தியமைக்கப்பட்டது. அரசியல் பொருளாதாரத் துறைகளில் நிலையான தன்மையை உறுதிப்படுத்துவதன் வாயிலாக முதலீட்டுக்கேற்ற சூழ்நிலையை உருவாக்கி, இறக்குமதியைத் தாரளமாக்கியதாலும், ஏற்றுமதி வளர்ச்சியில் குறுங்காலக் கட்டுப்பாடுகளை ஏற்படுத்தியதனுலும் இடைக்காலப் பொருளாதார மாற்றலில், சென்மதி நிலுவையில் உருவாகக்கூடிய நடைமுறைக் கணக்குக் குறையை ஈடுசெய்ய வெளிநாட்டுதவியைப் பெருமளவில் திரட்டுவதென முடிவு செய்யப்பட்டது. பொதுவாகக் கூறுகையில் கடுமையான கட்டுப்பாடுகளும், குறுகிய நோக்குத்தன்மையும் கொண்ட நலத்துறை அடிப்படையிலமைந்த பொருளாதார வழிமுறையிலிருந்து தாராளமான பரந்து நோக்கும் வளர்ச்சியடிப்படையிலமைந்த பொருளாதாரத்திற்கு விரைந்து மாறும் தன்மையை இக் கொள்கைகள் எதிர்பார்க்கின்றன,

1978இல் நடைமுறை விலைகளில் மொத்தத் தேசிய உற்பத்தி 24 சதவீதத்தால் அதிகரித்தது. விலை அதிகரிப்புக்களுக்கேற்ப குறைக்கப்படின் தேசிய உற்பத்தியின் உண்மை வளர்ச்சி 8.2 சதவீதமாக இருந்தது. மக்கட் தொகையில் ஏற்பட்ட 1·7 சதவீதங் கொண்ட அதிகரிப்புக்கு இடம்கொடுக்குமிடத்து தலைக்குரிய உண்மை உற்பத்தி 6·4 சதவீதத்தால் அதிகரித்தது. இது சென்ற ஆண்டின் 2·6 சதவீத அதிகரிப்பிலும் பார்க்க குறிப்பிடத்தக்களவு உயர்ந்ததாகும். நடைமுறைச் சந்தை விலைகளில் தலைக்கான தேசிய உற்பத்தி 1977 இல் ரூ. 2,095 இல் இருந்து 1978 இல் ரூ. 2,548க்கு உயர்ந்தது. இது 22 சதவீத அதிகரிப்பாகும்.

1977 இல் பொருளாதார வளர்ச்சியில் அரைப் பங்கிற்கு வகை கூறிய வேளாண்மைத்துறை 1978 இல் மொத்த தேசிய உற்பத்தியின் அதிகரிப்பில் 17 சத வீதத்திற்கு மட்டுமே பொறுப்பாக இருந்தது. 1978 இல் பெருந்துறையில் பல துறைகளின் வளர்ச்சியைக் காட்டுகையில் கட்டடவாக்கம் 16 சதவீதத்திற்கு வகைகூற, வர்த்தகம் 14 சதவீதத்திற்கு வகைகூற, கைத்தொழில் 13 சதவீதத்திற்கு வகைகூற, சுரங்கமும் பார்குழித் தொழிலும் 11 சதவீதத்திற்கு வகைகூற ஏனைய பணிகள் 10 சதவீதத்திற்கு வகைகூறின. 1977 இல் உருவாக்கப்பட்ட புதிய பொருளாதாரக் கொள்கைகள் இத்துறைகளின் குறிப்பிடத்தக்க வளர்ச்சிக்கு முதன்மைக் காரணமாக விளங்கின. இறக்குமதி தாராளமாக்கப்பட்டமை. வர்த்தகக் கைத்தொழில் வளர்ச்சிக்கு பெருமளவு துணையாகவிருந்தது. இறப்பரிலும், தெங்கிலும் ஏற்பட்ட திருந்திய உற்பத்தியாளர் இலாப எல்லைகளே வேளாண்மைத்துறை வளர்ச்சிக்கு துணை நின்றன. இத்தகைய நிலைக்கு புதிய செலாவணி வீதமும், நெல்லிற்கு கிடைத்த அதிகரித்த விலைகளும் ஓரளவு காரணமாகவிருந்தன. திருந்திய முதலீட்டுச் சூழ்நிலையையும் வர்த்தக அமைப்பில் கட்டுப்பாடு தளர்த்தப்பட்ட தன்மையும், அடுத்து கட்டடவாக்கத்தில் ஏற்பட்ட செழிப்பும், கட்டடவாக்கத்தினதும், சுரங்கப் பார்குழித் தொழிலினதும் விரிவாக்கத்திற்குப் பெருமளவில் காரணமாகவிருந்தன.

# மொத்தத் தேசிய உற்பத்தி

**நடைமுறைக் காரணிச் செலவு விலைகளில்**
**ஆண்டுதோறும்**





பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

# கைத்தொழில் மூலங்களின்படி மொத்த உள்நாட்டு உற்பத்தி

**நடைமுறைக் காரணிச் செலவு விலைகளில்**

**ஆண்டுதோறும்**




பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

வேளாண்மைத்துறையில் வளர்ச்சியானது 1977 இல் 7 சதவீதமாகவிருந்து 1978 இல் 4 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. சென்ற ஆண்டு 34 சதவீதத்தால் அதிகரித்த நெல் உற்பத்தி மேலும் 13சத வீதத்தால்முன்னேறி என்றுமில்லாத அளவிற்கு 910 இலட்சம் புசல்களாக 1978 இல் விளங்கியது. இதன் காரணமாக அரிசி இறக்குமதியில் பெருமளவு வீழ்ச்சி ஏற்பட்டது. சார்பான பருவ காலத்தினுலும் வளமாக்கியின் அதிகரித்த பயன்பாட்டினுலும் கூடிய கொடுகடனும், கூடிய உத்தரவாத விலைகள் நிலவியதினுலும் 1978 இன் பெரும்போக, சிறுபோக பருவகால உச்சநிலைகள் 1977 இலும் பார்க்க முறையே 12 சதவீதத்தாலும் 13 சதவீதத்தாலும் அதிகரித்தன. சென்ற ஆண்டில் முன்னைய நிலையை அடைந்திருந்ததேயிலை உற்பத்தி 5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. சென்ற ஆண்டில் 4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்த இறப்பர் உற்பத்தி செழிப்பான விலைகளின் சூழ்நிலையில் 7 சதவீதத்தால் அதிகரித்தது. சென்ற ஆண்டில் நிலவிய சார்பான பருவநிலை காரணமாக வளமாக்கி கூடியளவு பயன்படுத்தப்பட்டதினுல் தெங்கு உற்பத்தி கூட 21 சதவீதத்தால் உயர்ச்சியடைந்தது. மரபுவழியான சிறிய ஏற்றுமதிப் பயிர்கள் சமநிலையற்ற தன்மையில் இருக்க துணை உணவுப் பயிர்கள் வீழ்ச்சியுற்றன. ஓரளவு கடற்றெழில் முன்னேற்றம் கண்டிருந்தபோதும் கால்நடைக் கைத்தொழிலும் பின்னடைவை அடைந்தது. முழுமையாகப் பார்க்குமிடத்து வேளாண்மையைப் பொறுத்தவரையில் சமநிலையற்ற ஆண்டாகவே 1978 விளங்கியது.

மேலும் விபரமாய் பின்பு கூறப்படுவதற்கு அமைய ஏற்றுமதி வேளாண்மையின் சமநிலையற்ற செயலாற்றம், குறிப்பாக தேயிலையில் அடைந்த பின்னடைவு மிகக் கவலைக்குரிய விடயமாகும். புதிய பொருளாதாரக் கொள்கைகளில் இத்துறைக்கு புத்துயிர் அளிப்பதில் முக்கிய கவனம் செலுத்தப்பட வேண்டும். ஏற்கனவே பெற்ற கடன்களைத் திருப்பிக் கொடுப்பதற்கும், பொருளாதார மாறுதல்களுக்கு எதிர்காலத்தில் தாராளமாக்கப்பட்ட வர்த்தகத்தை உள்ளடக்கிய நீண்டகால அடிப்படையிலான பொருளாதாரச் சீர்திருத்தங்களை மிக அண்மையான எதிர்காலத்தில் நிலைப்படுத்த வேண்டின் மூலவளங்களை உருவாக்கி நெறிப்படுத்த வேண்டியதிற்கும் கூடியளவு வலிமைமிக்க கொள்கைகள் கடைப்பிடிக்கப்படவேண்டும். உயர்மட்டத்தில் அரசு முதலீடுகளைப்பேண போதிய வருவாயை உருவாக்கவும் இத்துறை மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்கியது. மேலும் ஏற்றுமதி வேளாண்மையிலேயே ஏற்றுமதி சார்பான வளர்ச்சியின் பெரும் பகுதி அடங்கியிருக்கின்றது. இதன் உள்ளடக்கம் மேலும் கணிசமான அளவாகவிருக்கின்றது. எனவே சிறப்பாக ஏற்றுமதி வரியை யொட்டிய உற்பத்தியாளரின் போதிய இலாப எல்லை பற்றியும் உற்பத்திச் செலவின் போக்குகள் பற்றியும் தொடர்ந்து பேண வேண்டிய சில சந்தைக்கட்டுப்பாடுகள் பற்றிய விடயங்களே ஆழமான ஆய்வுக்குரியனவாக விளங்குகின்றன.

உள்நாட்டு வேளாண்மைத்துறையைப் பொறுத்தவரையில் உற்பத்தியாளருக்குப் போதிய இலாப எல்லைகளை உறுதிப்படுத்த வேண்டிய தேவையும், அதே வேளையில் நுகர்வோர் நியாயமான விலைகளில் பொருட்களை பெற உறுதியளிப்பதும் 1978 இல் தொடர்ந்து நிலவிய நிலையான முரண்பாடாக விளங்கியது. மிகப்பெருமளவு உதவுதொகை அடிப்படையில் கோதுமை மா தொடர்ந்து கிடைக்கத்தக்கதாக இருந்தமை இறக்குமதிப் பதிலீடாக விளங்கக்கூடிய துணை உணவுப் பயிர்களின் வளர்ச்சிக்குப் பாதகமாக

விருந்தது போல் தோன்றுகிறது. விலைகளில் ஏற்படும் பருவகால ஏற்ற இறக்கங்களை சமன்செய்வதற்காக ''தாங்கிருப்புத் திட்டங்களை'', சிக்கன மற்ற மட்டங்களிலுள்ள வீழ்ச்சியுற்ற உற்பத்தியாளர் விலைகளை உயர்த்த விடப்பட்ட நிலையில்கூட உள்நாட்டு உற்பத்தியில் இதே தன்மையுடைய பாதகமான தாக்கம் ஏற்படக்கூடும். நுகர்வோரினதும், உற்பத்தியாளர்களி னதும் முரண்பட்ட தேவைகளுக்கிடையில் ஒரு பரிமாற்றம் தேவையென் பது வலியுறுத்தப்படாமலே உணரப்படவேண்டும்.

இறக்குமதி தாராளமாக்கப்பட்டதினுல் இலங்கையில் தேக்க நிலையில் இருந்த கைத்தொழில் அமைப்பு ஒரு வளர்ச்சியைக் கண்டது. தொழிற் சாலைகளிலும், சிறிய கைத்தொழில்துறையிலும் வெளியீட்டின் பெறுமதி 1978 இல் 11 சதவீதத்தால் வளர்ச்சியுற்றதென மதிப்பிடப்பட்டுள்ளது. அரசதுறையுடன் ஒப்பிடுகையில் அதனிலும் பார்க்க தனியார்துறை மிகச் சிறிதளவு வளர்சியையே காட்டியுள்ளது. அடிப்படை உலோகங்கள், புடவை கள், உலோமற்ற கனிப்பொருட்கள், தாள், இரசாயனம் ஆகியவையே முக் கிய வளர்சியுற்ற துறைகளாக விளங்குகின்றன. புடவைத்துறையைப் பொறுத் தவரையில் சிறு நிறுவனங்களை ஈடுசெய்வதற்கு மேலாக பெருநிறுவனங்கள் பெரு வளர்ச்சியைக் காட்டியுள்ளன. எனினும் இறக்குமதி தாராளமாகப்பட்ட திலும் பார்க்கத் தொழில் வாய்ப்பைப் பொறுத்தவரையில் இத்துறையில் இவை பாதக விளைவினை ஏற்படுத்தும். புடைவையின் மீதான விலைக்கொள்கை குறிப்பாக பொதுமக்களால் பெரிதும் கொள்வனவு செய்யப்படும் புடவைகளின் விலைகளைக் குறைந்த விலையில் அதாவது குறைந்த தீர்வைகள் அடிப்படையில் அரசு செய்யும் இறக்குமதிகள் கூடிய சிக்கல்களை உருவாக்கியுள்ளது. உணவு, உலோக உற்பத்தி, பொறிக் கைத்தொழில்கள் போன்ற கைத்தொழில்கள் போதிய தீர்வை, பாதுகாப்பு அளிக்கப்பட்ட நிலையிலும் கூட இறக்குமதியுடன் போட்டியிட முடியாமல் இருப்பனபோல் தோன்றின. எனவே கைத்தொழில் கொள்கையைப் பற்றி மீளாய்வு செய்வதற்குரிய காலமாக இது விளங்குகிறது. அடிப்படையில் திறனற்ற கைத்தொழில்களுக்கு தொடர்ந்து பாதுகாப்புக்கொடு த்தல் எந்த விதத்திலும் சிக்கன நடவடிக்கையாக இருக்கவில்லை. மிகத்திறமை வாய்ந்த பன்ஞட்டு அடிப்படையில் அமைந்த போட்டிக்குரிய கைத்தொழில்களை விரைவாக உருவாக்குவதே இன்றைய தேவையென ஏற்றுமதி அடிப்படை யிலான கைத்தொழில் கொள்கையின் எதிர்பார்ப்பாகும். மறுபுறம் தொடக் கத்தில் அரசதுறைக் கைத்தொழிலிலிருந்து மிக வலுவான ஆதரவு கிடைத்தது. ஆனுல் காலப்போக்கில் இது ஓரளவு குறைந்துள்ளது. சில அரச கைத்தொழில் கள் தொடர்ந்தும் தமது தனியுரிமையை அனுபவித்துக்கொண்டு வருகின்றன. சீமெந்தும் மட்பாண்டமும் இதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. சில வேளைகளில் பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத்தால் இறக்குமதி செய்யப் பட்ட எரிசோடா போன்ற சில வர்த்தக நடவடிக்கைகளிலும் இந் நிலைமை நிலவுகிறது. அதிகரித்த போட்டியினுல் ஏதாவது இலாபங்கள் ஏற்படுமா என்பதை மதிப்பிடுவதற்காக இத்தகைய தனியுரிமைகள் தொடர்ந்திருப்பது பற்றி ஆராயும் நிலை ஏற்படலாம். அரச கைத்தொழில் துறைகளில் விலையிடு வது பற்றியும், உற்பத்திக் கொள்கையைப் பற்றியும் பெருமளவு தனியுரிமை இருக்க வேண்டும் போல் தோன்றுகின்றது.

அண்மைக் காலங்களில் நாட்டின் போக்குவரத்துத் தொடர்புத்துறை பின்தங்கிய நிலையை அடைந்துள்ளது. நாட்டு உடைமையாக்கப்பட்ட பொது தெரு பயணப் போக்குவரத்தில் பயணம் செய்யவேண்டிய மைல்களிலும்

பார்க்க தொழிற்பட்ட மைல்கள் 18 சதவீதம் குறைவுடையதாயிருந்தது. 1978இல் பேருந்துக் கட்டணங்கள் உயர்த்தப்பட்ட நிலையிலும் இதற்குப் பொறுப்பான அமைப்பின் நிதி நிலைமை மேலும் திருந்தியதற்குச் சான்றில்லை. இதன் பணிகளைத் திருத்துவதற்கு அமைப்பு பன்முகப்படுத்தப்பட்டமை துணை நிற்கவில்லைப் போல் தோன்றுகிறது. தெரிந்தெடுக்கப்பட்ட சில நகரம் சார்ந்ததெருக்களில் இன்றுள்ள பணிகளுடன் தனியார் போக்குவரத்துப் பணிகளையும் இணைத்துச் செயல்பட அரசு எண்ணியுள்ளது. நகரப் பயணப் போக்குவரத்திலேயே இப்பணியின் போதாத்தன்மை பெரிதும் தெரிகிறது. விரைந்த அதிகரித்த தேவைக்கேற்ப இதன் பணி ஈடுகொடுக்கவில்லை. குறைந்த கட்டண அமைப்பு முறை நிலவிய காலத்தில் தொடர்ந்து தொழிற்பாட்டுக்குறைகள் நிலவியதனால் போதிய முதலீடு செய்ய முடியாத நிலையில் அதிகரித்த தேவைக்கு ஈடுசெய்யும் முறையில் நாட்டுடமைப் பணி அமையவில்லை. மறுபுறம் எமக்குக் கிடைத்துள்ள தகவல் புகைவண்டித் திணைக்களத்தின் தொடர்சியான வீழ்ச்சியினை எடுத்துக்காட்டுகின்றது. எண்ணெய் விலைகள் அதிகரித்த நிலையிலும், அதிகரித்த பொருளாதார நடவடிக்கை காரணமாக அரச போக்குவரத்துக்கு ஏற்பட்ட அதிகரித்த தேவை காரணமாகவும் அரச போக்கு வரத்தில் கூடிய முதலீடும் கட்டண அதிகரிப்பும், சீராக்கமும் திருந்திய முகாமையிடலும் முக்கிய பண்புகளாக அமைகின்றன. எனினும், தெருவில் கொண்டு செல்லலைப் பொறுத்த வரையில் போக்குவரத்தில் இறக்குமதி தாராளமாக்கப்பட்டதையடுத்து 1978 இல் 4,874 இழுவை வண்டிகளும் வான்களும் பதிவு செய்யப்பட்டன. இவை 1976 இல் முடிவுற்ற ஐந்து ஆண்டுகளில் இருந்தத மொத்த அதிகரிப்பிலும் பார்க்க இரட்டிப்பானதாகும். இவை அடக்கி வைக்கப்பட்ட தேவைகளை நிறைவு செய்ததோடு அதிகரித்த போட்டியானது போக்குவரத்துக் கட்டணங்களை 10 சதவீதத்திலிருந்து 20 சதவீதத்திற்கு 1978 இல் வீழ்ச்சியுறச் செய்துள்ளது போல் தோன்றுகின்றது. செய்யப்பட்ட முதலீடு போதாமை காரணமாக தேசிய தொலை தொடர்பு அமைப்பு, காலத்தின் தேவையை நிறைவு செய்வதாக அமையவில்லை. வெளிநாட்டு முதலீட்டைக் கவர்வதற்கும் பொருளாதார வளர்ச்சியில் உயர்வீதத்தை அடைவதற்கும் விரைந்த போக்கு வரத்து, தொலைதொடர்பு அமைப்பு காட்டாயமானதாகும்.

எதிர்ப்பார்த்ததற்கமைய இலங்கையின் வர்த்தகக் கொடுப்பனவு நிலைமை 1978 இல் பாதகமாக இருந்தது. இதற்கு ரூ. 21,430 இலட்சம் (சி. எ. உ. 1,330 இலட்சம்) கொண்ட வர்த்தகக் குறையை ஏற்படுத்தும் முறையில் இறக்குமதியில் 23 சதவீத வளர்ச்சியும் ஏற்றுமதியில் மிகச்சிறிதளவு உயர்ச்சியும் பெருமளவு காரணமாக அமைகின்றன. வர்த்தகம், கல்வி, ஏற்றுமதி ஊக்குவித்தல் மற்றும் ஏனைய தேவைகளுக்காகச் செய்யப்பட்ட வெளிநாட்டுப் பயணத்தில் ஏற்பட்ட அதிகரித்த செலவு காரணமாக பணிகளின் மிகை குறைவுற்றது. ஆனால் வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையரின் பண அனுப்புதலில் ஏற்பட்ட மிகக் கூடிய அதிகரிப்பினால் தேசிய மாற்றங்கள் குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் காட்டின. எனவே சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கு ரூ 7,820 இலட்சம் (சி. எ. உ. 640 இலட்சம்) கொண்ட குறையைக் காட்டியது. இது சென்ற ஆண்டின் ரூ 12,660 இலட்சம் (சி. எ. உ. 1,160 இலட்சம்) கொண்ட மிகையுடன் ஒப்பிடத்தக்கது. எனினும் ரூபா 5,630 இலட்சத்திலிருந்து (சி. எ. உ. 540 இலட்சம்) ரூ. 26,400 இலட்சத்துக்கு (சி. எ. உ. 1,350 இலட்சம்) மிகக்கூடிய தேறிய உள்ளோட்டம் நடைமுறைக் குறையை மேலதிகமாக ஈடு செய்த

தோடு ஆண்டு முடிவில் ரூ. 19,040 இலட்சத்தால் (சி. எ. உ. 650 இலட்சம்) வெளிநாட்டுச் சொத்துக்களை அதிகரிக்க உதவியது.

சென்ற ஆண்டுபோல் சென்மதி நிலுவையில் முழுமையான மிகைக்கு ஏற்ப வெளிநாட்டுச் சொத்துக்கள் அதிகரித்தன. எனினும் பொருளாதாரத்தில் ஏற்பட்ட விரிவாக்கத் தாக்கப் போக்கு அரசதுறையின் சுருக்கத் தாக்கத்தினால் கணிசமானளவு மிதமாக்கப்பட்டது. இதன் விளைவாக 1978 இல் பணநிரம்பலின் அதிகரிப்பு 11 சதவீதம் கொண்ட ஓரளவு தாங்கத்தக்க நிலையில் வைக்கப்பட்டது. இது சென்ற இரு ஆண்டுகளின் 29 சதவீத, 35 சதவீத அதிகரிப்புகளுக்கு மிகப் பெருமளவில் மாறுபட்ட முறையில் இருந்தது. தனியார்துறைக்கு வழங்கும் கொடுகடன் விரிவை கட்டுப்படுத்தும் கடுமையான நாணயக் கொள்கைகளும் உயர்ந்த குறுங்கால வட்டி வீதங்களும் 1978 வரை தொடர்ந்து விளங்கியதுடன் இவை அரச கூட்டுத்தாபனங்களுக்கு வழங்கும் தொகை மீது உச்சவரம்பு இடப்பட்டு மீள வலுவூட்டப்பட்டன. எனவே, 1978 இல் நாணயத் துறையிலும் இறைத்துறையிலும் கட்டுப்பாடுகள் கொண்டுவரப்படாதிருப்பின் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மிகத் தேவையான நிலையான பொருளாதாரத் தன்மையை நாமடைந்திருக்கமுடியாது. கொடுகடனுக்கான உயர்ந்தசெலவுபற்றி சில முறைப்பாடு இருந்ததெனினும் தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக ஏற்பட்ட விரைவான விரிவுத் தாக்கத்தைத் தடுத்து நாணயத்தின் நிலையான தன்மையை மீளப்பேணுவதற்கு குறுங்கால அடிப்படையில் பண வீக்கத்திற்கு எதிரான நாணயக்கொள்கை மேற்கொள்ளப்படப்பட்டது. சேமிப்புகளுக்கு சார்பான (கூடிய) வட்டி வீதம் வழங்குகை விரிவடையும் பொருளாதாரத்திற்கு ஒரு இன்றியமையாத பண்பாகும். வேறு சொற்களில் விளம்பின் அபிவிருத்திக்கான போதிய மூலவளங்கள் உருவாக்கப்படவேண்டின் எதிர்பார்க்கக்கூடிய பணவீக்கத்தைப் பார்க்கிலும் (ஆகக்குறைந்த நடைமுறை) கூடிய வருவாய் (அதன் வட்டி வீதமானது) சேமிப்பாளருக்கு வழங்கப்படல்வேண்டும். ஏறக்குறைய 15 சதவீதத்தில் இலங்கையில் பணவீக்கம் நிலவுகின்ற இச் சூழ்நிலையில் முந்திய ஆண்டின் மலிவான பணக்கொள்கைகளுக்கு மீளச்செல்லல் உறுதியாக எதிர்மாறான விளைவையே ஏற்படுத்தும். நடைமுறை மட்டத்தில் உள்ள வட்டி வீதங்கள் கடன்பெறுவோருக்குத் தடையாக இருக்கவில்லை என்பதையே 1978 இல் கொடுகடனுக்கு எழுந்த மிக உயர்ந்த கேள்வி எடுத்துக்காட்டுகின்றது. உண்மையில் நீண்டகால முதலீடு செய்வோர் உயர்ந்த வட்டி வீதங்களால் கவரப்படாமல் இருக்கலாம். இக்காரணத்தினால்தான் 1977 இல் செய்யப்பட்ட வட்டி வீத சீர்திருத்தத்திற்குள் நீண்டகால கடன் வழங்கும் வீதங்கள் கொண்டுவரப்படவில்லை. நிறுவனங்களில் போதிய நீண்டகால மூலதனத்திற்கு இது எடுத்துக் காட்டுகிறதுபோலும். 1979 இல் தொழிற்படவிருக்கும் புதிய தேசிய அபிவிருத்தி வங்கி இவ்வெற்றிடத்தைப் பெருமளவில் நிரப்பும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

1977 இல் செய்யப்பட்ட பொருளாதாரச் சீர்திருத்தங்கள் அரசின் வருமானத்திலும், செலவினத்திலும் கணிசமான உயர்வை ஏற்படுத்துகின்றது. எனினும், எதிர்பார்க்கப்பட்ட மிகையினை உருவாக்க முடியவில்லை. நடைமுறைக்கணக்கில் ரூ. 7010 இலட்சம் குறை இருந்ததே இதற்குக் காரணமாகும். 1978 இல் இறைத்தொழிற்பாடுகள் ரூ. 1,730 இலட்சம் கொண்ட விரிவுத்தாக்கத்தை எடுத்துக்காட்டியது. இது ரூ. 15,000 இலட்சம் கொண்ட சுருக்கத் தாக்கத்தை எடுத்துக்காட்டிய நாணய வங்கித்தரவிற்கு முற்றிலும் மாறுபட்ட முறையில் அமைந்திருந்தது. ஆண்டு முடிவில் நடைமுறைப்படுத்தப்பட்ட சில நிதி மாறுதல்களும் வழக்கத்திற்கு

மாறாக தீர்ப்பனவு செய்யப்படாத காசோலைகள் மிதக்க விடப்பட்டமையும் இதற்குப் பெருமளவு காரணமாக அமைந்துள்ளன. உரிய சீராக்கம் செய்யப் படின் 1978 இன் வரவு செலவுத்திட்ட தொழிற்பாடுகள் ரூ. 8,930 இலட்சம் கொண்ட சுருக்கத்தாக்கத்தைக் காட்டும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட மூலதன வாக்குகள் 1977 இல் 27 சதவீதமாக இருந்து 1978 இல் 16 சதவீதத் திற்கு வீழ்ச்சியுற்றது. 1979 இல் தொடங்க எதிர்பார்க்கப்படும் விரைவான அரச நடவடிக்கை கூடியளவு மூலதன வாக்குகளை பயன்படுத்தும் நிலையை உருவாக்கும்.

சென்ற ஆண்டில் குறிப்பிட்டதற்கமைய 1977ம் ஆண்டு இலங்கையின் பொருளாதார வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக விளங்கியது. பெருமளவு குறுகிய நோக்கம் கொண்ட இறுக்கமான கட்டுப்பாட்டுடன் நலத்துறை அடிப் படையில் அமைந்த அமைப்புக்கு மாறான ஏற்றுமதி வளர்ச்சியை வலியுறுத்தி, பொருளாதார வளர்ச்சிக்கும், தொழில்வாய்ப்பை உருவாக்குவதற்கும், போட் டியுடன் அமைந்த அதிகரித்த மூலதன முதலீட்டை நாடி நாடு நிற்கின்றது. புதிய பொருளாதார அமைப்புக்கு உட்பட்ட முதல் முழு ஆண்டாக 1978ம் ஆண்டு விளங்கியதுடன் கட்டுப்படுத்தப்பட்ட அமைப்பிலிருந்து தாராளமாக் கப்பட்ட அமைப்புக்கு மாற்றியதனால் ஏற்பட்ட பல சிக்கல்களை சீராக்கம் செய் யப்பட்டதற்கும் இவ்வாண்டில் சான்றுகளிலிருந்தன. 1978 இல் ஆகக்கூடிய ஊக்கம் தரும் பண்பு யாதெனில் உயர்ந்த வளர்ச்சி வீதத்தை அடைவதற் கான புதிய பொருளாதாரக் கொள்கைக்கு நாட்டின் பொருளாதாரம் இயல் பாகவும், உடனடியாகவும் காட்டிய ஆதரவேயாகும். தேயிலைக் கைத்தொழில் அடைந்த பின்னடைவினாலும், புதிய தூண்டுதல்களுக்கு ஏற்றுமதிகள் காட் டிய வழமையான காலம் தாழ்த்திய ஆதரவும், ஏற்றுமதிகளில் ஏற்பட்ட சிறிதளவு மொத்த வளர்ச்சிக்கு ஓரளவு காரணமாக அமைந்தன. எனினும் மரபு வழியான துறையில் எதிர்பாராத இலாபங்களை சமன் செய்வதற்காக விலைத்தூண்டுதல்கள் குறைக்கப்பட்டுள்ளன. விரைந்த சார்பான ஆதரவைச் சிறப்பாக தேயிலையிலும், தெங்கிலும் மற்றும் சிறு ஏற்றுமதிப் பொருட்க ளிலும் தூண்டுவதற்கு கொள்கைகளை மீளாய்வு செய்யவேண்டியிருக்கிறது.

செலாவணிச்சீர்திருத்தத்திற்குப் பின்பும் பங்கீட்டு அடிப்படையில் வழங் கப்பட்ட சில உதவுதொகை, உணவை நீக்கிய பின்பும் உலகெங்கிலும் ஏற் பட்ட பணவீக்கத்தை அடுத்து அதிகரித்த கூலிகள் வழங்கப்பட்ட நிலையிலும் பொருட்களின் விலைகள் அதிகரித்த நிலையிலும் பணவீக்கத்தைக் கட்டுப் படுத்தியது ஒரு பெரும் வெற்றியாகும். விலைகளில் ஏற்பட்ட அமுக்கத்தைக் குறைப்பதற்கு இறுக்கமான நாணயக்கொள்கையும் இறைக் கட்டுப்பாடும் தாராளமாக்கப்பட்டதினால் உருவாக்கப்பட்ட போட்டியும், கூடிய இறக்குமதி களும், மிகச்சிறந்த நெல் அறுவடையும் துணைநின்றன. எதிர்காலத்தில் உலகச்சந்தையில் இலங்கை தொடர்ந்தும் இருக்க வேண்டின் விலைகளின்மீது நாம் மிகக் கவனம் செலுத்தல்வேண்டும்.

1978 இல் பொருளாதாரத்தில் ஏற்பட்ட விரைந்த தொழிற்பாட்டுக்கு தேக்க நிலையிலிருந்த பொருளாதாரத்தின் மீது செலுத்திய உடனடிக்கவன மும், கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமையும், விலை அதிகரிப்புத்தூண்டுதல்கள் மீண்டும் கொண்டுவரப்பட்டமையுமே காரணங்களாகும். உடனடியாக எதிர்கால அடிப்படையிலும், நீண்டகால அடிப்படையிலும் இத்தகைய வளர்ச்சியளவைப் பேணவேண்டின் உயர்ந்த மட்டத்தில் சேமிப்புகளும், முதலீடும் தேவைப்

படுவதோடு பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் முறையில் மேலும் கொள்கை முடிவுகளும் உருவாக்கப்படல் வேண்டும், அத்துடன் நுகர்வோருக்கும் உற்பத்தியாளருக்கும் இடையில் நிலவும் இலாபநோக்கொட்டிய முரண்பட்ட நோக்கும் குறைக்கப்படல்வேண்டும். தனியுரிமை அதிகாரங்களும், பயன்தராத கட்டுப்பாடுகளும் நீக்கப்படவேண்டும். வளர்ச்சிக்கும் பங்கீட்டுக் குமிடையிலான ஏற்கத்தக்க சமநிலை ஒன்று உருவாக்கப்படல்வேண்டும். 1978 இன் பொருளாதாரத்தின் செயலாற்றம். உரிய கொள்கைச் சூழ்நிலையில் நடைமுறைப்படுத்தப்படின் தன்னில் தங்கியிருக்கும் பொருளாதார அபிவிருத்தியின் வழியில் செல்லும் ஆற்றல் எமக்குண்டு என்பதனை தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது,

## தேசிய உற்பத்தியும் வருமானமும்

1978இன் நடைமுறைக் காரணிச் செலவு விலைகளில் மொத்தத் தேசிய உற்பத்தியானது ரூ. 361,390 இலட்சம் என தற்காலிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது சென்ற ஆண்டிலும் பார்க்க 23,5 சதவீத அதிகரிப்பை எடுத்துக்காட்டியது. விலை அதிகரிப்பிற்கு இடம்விடின் நிலையான (1959) விலைகளில் மொத்தத் தேசியஉற்பத்தியானது ரூ, 130,020 இலட்சம் என 1978 இல் மதிப்பிடப்பட்டுள்ளது. இது 8·2 சதவீத அதிகரிப்பைப் பிரதிபலிக்கின்றது. ஒப்புநோக்குகையில் 1977 இல் இதன் அதிகரிப்பு 4·4 சதவீதமாக விளங்கியது. 1978 இல் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியானது கடந்த பத்தாண்டுகளின் சராசரி வீத வளர்ச்சியிலும் பார்க்க இரட்டிப்பிற்கு மேலாக இருந்தது. அத்துடன் அண்மைய ஆண்டுகளில் அடைந்த ஆகக்கூடிய வளர்ச்சிக்கு ஏறக்குறைய சமமாக இருந்தது. அதாவது 1968 இன் 8·4 சதவீத கொண்ட வளர்ச்சிக்கு இணையாக இருந்தது. சென்ற சில ஆண்டுகளில் சிலதுறைகளில் மட்டும் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டிருக்கையில் பொருளாதாரத்தின் ஏனைய துறை தேக்க நிலையில் அல்லது வீழ்ச்சியுற்ற நிலையில் இருக்க முற்றிலும் மாறுபட்டமுறையில் எல்லாத் துறைகளிலும் உயர்மட்ட தொழிற்பாடு நடவடிக்கை 1978 இல் இருந்தது. சுரங்கத்தொழில், பார்க்குழித்தொழில் கட்டடவாக்கம், மின்வலு, நிதி, தயாரிப்பு வர்த்தகம் ஆகிய தொழில்களில் மிகக் குறிப்பிடத்தக்க வளர்ச்சி காணப்பட்டது.

1978 இன் நடுப்பகுதியில்இலங்கையின் மக்கள் தொகை 142 இலட்சம் என தற்காலிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது 1.7 சதவீதம் கொண்ட ஆண்டதிகரிப்பினை எடுத்துக்காட்டுகின்றது. எனவே உண்மைநியதிகளின்படி தலைக்குரிய மொத்தத் தேசிய உற்பத்தி ரூ. 917 ஆக விளங்கி 6·4 சதவீத அதிகரிப்பை எடுத்துக் காட்டுகின்றது. ஒப்புநோக்குகையில் சென்ற ஆண்டில் ஏற்பட்ட அதிகரிப்பு 2.6 சதவீதமாக விளங்கியது.

இலங்கையின் வர்த்தக மாற்றுவீதம் 76 இலும் 77 இலும் முறையே 35 சதவீதத்தாலும் 31 சதவீதத்தாலும் முன்னேறியது. ஏற்றுமதி விலைகளில் மிகப் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டதே இவ்விளைவுக்கு முக்கிய காரணமாகும். எனினும்இந்நிலை 1978இல் மிகச் சிறியளவால் வீழ்ச்சியுற்றது. இதன் விளைவாக வர்த்தக மாற்று விகித்தில் செய்யப்படும் மாற்றங்களால் உண்மை மொத்தத் தேசிய உற்பத்தி சீராக்கஞ் செய்யப்பட்டு பெறப்பட்ட உண்மைத்தேசிய வருவாய் 1978 இல் 7.8 சதவீதத்தால் வளர்ச்சியுற்றது. இது உண்மையான தேசிய உற்பத்தியின் வளர்ச்சியிலும் பார்க்க மிகச் சிறிதளவால் குறைந்ததாகும்.